நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை குற்றத் தடுப்புத் தொடர்கள்

# உங்கள் வீட்டைப் பாதுகாத்துக் கொள்ளவும்

வீட்டுப் பாதுகாப்பு

நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் பாதுகாப்பையும், பத்திரத் தன்மையையும் அனுபவிக்கும் இடமாக வீடு இருக்க வேண்டும்.

குற்றவாளிகள் பெரும்பாலும் சந்தர்ப்பவாதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் பொருட்களைத் திருடுவதற்கு மோசமான பாதுகாப்பு உள்ள வீடுகளையே இலக்கு வைக்கிறார்கள்.

திருடர்களின் இலக்காக உங்கள் வீடு ஆளாகும் அபாயத்தைப் பெருமளவில் குறைக்க ஒரு சில எளிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நீங்கள் உங்கள் வீட்டைப் பாதுகாக்க முடியும்.

நமது வீட்டைப் பாதுகாத்துக் கொள்ள உதவும் வகையில் நாம் அனைவரும் பின்பற்ற வேண்டிய சில எளிய வழிமுறைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

## உங்கள் வீட்டைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும்

- தரமான பாதுகாப்புக் கதவுகள், சன்னல்கள், பூட்டுகள், எச்சரிக்கை ஒலிப்பான்கள், ஒளியமைப்பு மற்றும் எச்சரிக்கை அடையாளங்கள் போன்றவற்றைப் பொருத்தவும்.
- அனைத்து சன்னல்களையும், கதவுகளையும் பாதுகாப்பாக வைத்திருக்கவும்.
- உங்கள் எச்சரிக்கை ஒலிப்பான், புகை உணர்த்து கருவிகள் மற்றும் பாதுகாப்பு ஒளியமைப்பைச் செயல்படுத்தவும்.
- உங்கள் வெளிவாசல் கதவுகள், கொட்டகைகள் மற்றும் கார் நிறுத்துமிடங்களைப் பூட்டிவைக்கவும்.

## உங்கள் வீட்டைச் சரிபார்க்கவும்

- உங்கள் தெரு எண் தெளிவாகத் தெரிகிறதா என்பதை உறுதி செய்துகொள்ளவும்.
- உங்கள் வீட்டின் சுற்றுப்புறங்கள் தெளிவாகத் தெரிவதை மேம்படுத்த, மரங்கள் மற்றும் புதர்களை வெட்டிவிடவும்.
- ஏணிகள், தொழிற்கருவிகள் மற்றும் தோட்ட வேலை உபகரணங்கள் போன்ற சாமான்களைப் பூட்டி வைக்கவும்.
- மாற்றுச் சாவிகளை வீட்டுக்கு வெளியே விட்டுவைக்க வேண்டாம்.
- விலையுயர்ந்த பொருட்கள், கைப்பேசிக் கருவிகள் அல்லது சாவிகள் (வீடு அல்லது வாகனம்) வெளியே தெரியும்படி விட்டுவைக்க வேண்டாம்.
- விலையுயர்ந்த பொருட்களைக் குறித்து வைத்துக் கொள்ளவும். அத்துடன் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

## வீட்டை விட்டு வெளியே செல்லும்போது

- வீட்டில் யாரோ இருக்கும் உணர்வை ஏற்படுத்துவதற்காக வீட்டினுள்ளே வெளிச்சத்தையோ அல்லது வானொலியையோ இயக்க ஒரு கடிகை (timer) பயன்படுத்தவும்.
- உங்கள் வீட்டைப் பார்வையிட குடும்ப உறுப்பினர், நம்பிக்கைக்குரிய நண்பர் அல்லது அண்டை வீட்டார் ஒருவரை வைத்திருக்கவும். உங்கள் பயணத் திட்டங்களைப் பற்றி அவர்களிடம் தெரிவிக்கவும். வாகனப் பாதையில் ஒரு வாகனத்தை நிறுத்தி வைக்கவும், குப்பைப் பெட்டியையும், தபால்களையும் சேகரிக்குமாறு அவர்களிடம் கூறவும்.
- உங்கள் அஞ்சல், செய்திப் பத்திரிகைகள் மற்றும் தபால் பட்டுவாடா போன்றவற்றை மாற்றி அனுப்ப முயற்சிக்கவும்.
- சமூக ஊடக தளங்களில் உங்கள் பயணத்தை விளம்பரப்படுத்த வேண்டாம்.

உங்கள் வீட்டைப் பாதுகாப்பது பற்றிய மேலதிக விவரங்களுக்குத் தயவுசெய்து எங்களுடைய குற்றத் தடுப்புப் பக்கத்திலுள்ள எங்களது வீட்டுப் பாதுகாப்பு சிற்றேட்டை பார்க்கவும்.

***மேலதிகக் குற்றத் தடுப்புத் தகவல்களுக்கு www.police.nsw.gov.au என்ற எங்களது இணையதளத்துக்குச் செல்லவும்.***

NSW Police Force

NSW GOVERNMENT | Justice

**Triple Zero (000)**
நெருக்கடியான அல்லது உயிருக்கு ஆபத்தான நிலைமையில்.

**Police Assistance Line (131 444)**
நெருக்கடியில்லாத நேரங்களில்.

**Crime Stoppers (1800 333 000)**
குற்றம் பற்றிய தகவல்களை வழங்க. இதில் பெயர் வெளியிடப்படமாட்டாது.